1st April 1961]

Lignite Project

* 230 *Q*.—VIDWAN T. MUTHUKANNAPPAN : Will the Hon. the Minister for Industries be pleased the state—

(*a*) whether it is a fact that the Minister for Finance held discussions with the authorities of the Neyveli Lignite Corporation with regard to the progress of Lignite Project; and

(*b*) the stage of the progress made in the project?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The answer [a] is placed on the table of the House.

VIDWAN T. MUTHUKANNAPPAN : மொத்தம் எவ்வளவு நிலக்கரி புதையல் கிடைக்கும்? எத்தனை நூற்றாண்டுகள் அந்த வேலை நீடிக்கும் என்று தோராயமாகக் கணிக்கப்பட்டிருக்கிறதா?

THE HON. SRI R. VENKATARAMAN : நூறு சதுரமைல்களுக்கு நிலக்கரி இருப்பதாக இப்போது எஸ்டிமேட் போடப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போது ஒன்றும் பயன்படும்படியான நிலைமை இல்லை.

VIDWAN T. MUTHUKANNAPPAN : நெய்வேலி வேலை பூரணமாக செயல்பட எத்தனை ஆண்டுகள் ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது?

THE HON. SRI R. VENKATARAMAN : எந்த வேலை என்று குறிப்பிட்டால் சொல்லமுடியும். அங்கு பலதரப்பட்ட வேலைகள் நடக்கப்போகின்றன.

(1) மின்சாரம்
(2) உரத்தயாரிப்பு
(3) நிலக்கரி அச்சுகள் தயாரிப்பு
(4) க்ளே வாஷிங்

இப்படி பல காரியங்கள் அங்கே செய்யப்படுகின்றன. அவையெல்லாம் 1965-66-க்குள் பூர்த்தியாகலாம் என்று நினைக்கிறோம்.

VIDWAN T. MUTHUKANNAPPAN : நெய்வேலி நிலக்கரியையும் சேலம் இரும்பு தாதுப்பொருள்களையும் கொண்டு இரும்பு எஃகு உற்பத்தி இயந்திரம் தமிழ்நாட்டில் நிறுவுவது சாத்தியம் என்ற நம்பிக்கை அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கிறதா?

THE HON. SRI R. VENKATARAMAN : அது பரிசீலனை செய்யப்பட்டு பூர்வாங்க அறிக்கையில் நம்பிக்கை ஊட்டுவதாக இருக்கிற காரணத்தால் அதற்குப் பணம்கூட ஒதுக்கி இருக்கிறோம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அது சேர்க்கப்பட்டு அதற்கும் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

VIDWAN T. MUTHUKANNAPPAN : இந்த ஆலை சேலத்தில் நிறுவப்படுமா அல்லது நெய்வேலியில் நிறுவப்படுமா?

THE HON. SRI R. VENKATARAMAN : அதை இப்போது சொல்வதற்கில்லை.

MR. CHAIRMAN : Questions are over.

---

[a] Printed as Appendix III on page 166 infra.